**In the Court of the Principal District Judge, Vellore District.**
**Deposition of Witness for P.W.4**
**SC.No.138/2017**

**Name : Mushthari Dhassin**
**Father/Husband Name: N.K.கௌஸ்பாஷா**
**Village : ஆம்பூர்**
**Taluk : திருப்பத்தூர் (ஆம்பூர்)**
**Caste : முஸ்லீம்**
**Calling/Occupation : -**
**Religion : முஸ்லீம்**
**Age : 24**

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 19.09.2022.**

முதல் விசாரணை

என் பெயர் முஷ்தரி தசீன். நான் ஆம்பூர் கஸ்பா அப்துல் கலாம் தெருவில் அம்மா அப்பாவுடன் வசித்து வருகிறேன். நான் பத்தாம் வகுப்பு வரை உருது பள்ளியில் படித்தேன். எனக்கு தமிழ் சுமாராக படிக்கத் தெரியும். அப்பா ஆட்டோ ஓட்டுகிறார். என் அம்மா வீட்டில் தான் இருக்கிறார். என்னுடைய அப்பா ஆம்பூர் தவுகி ஜமாத்தில் தலைவராக இருந்து வருகிறார். என்னுடைய அம்மா பெயர் ஜரினா பானு. சாட்சிகள் அ.சா1 முதல் 3 வரை தெரியும். எனக்கு ஆஜர் எதிரிகளில் உள்ள 1வது எதிரியை தெரியும். அதுவும் தினசரி பேப்பரில் பாத்ததால் தெரியும். 2 முதல் 6 எதிரிகள் வரை தெரியாது. என் உடன் பிறந்தவர்கள் 2 தங்கைகள் ஒரு தம்பி. 15.09.2014ல் எனக்கும் பத்ம கார தெருவைச் சார்ந்த ஷாஜஹான் கடைசி மகன் ஜமீல் பாஷா என்பவருக்கும் திருமணம் நடந்தது. என் கணவர் ஆம்பூர் மோட்டு கொல்லையில் உள்ள டெல்டா ஷு பேக்டரியில் வேலை செய்தார். திருமணமாகி ஒரு மாதம் வரைஆம்பூரில் உள்ள என் மாமனார் வீட்டில் தான் இருந்தோம். ஒரு மாதம் கழித்து என் கணவர் வேலையை விட்டு விட்டார். அதன் பிறகு ஈரோட்டில் உள்ள ஆர். என் புதூரில் உள்ள ஜவுளி நகரில் நான், என் மாமனார், மாமியார் மற்றும் என் கணவர் ஆகியோர் குடியிருந்தோம். அங்கு என் கணவர் ஜமில் பாஷா சென்னை சில்க்ஸில் வேலை செய்தார். அதன் பிறகு கல்யாண் ஜுவல்லரியில் வேலை செய்தார். 13.06.2015 ஆம்பூரில் உள்ள என் பாட்டிக்கு உடம்பு சரியில்லாததால் நான், என் கணவர், மாமனார், மாமியார் ஆகியோர் பார்ப்பதற்காக வந்தோம். என் கணவர் கல்யான்

ஜுவல்லரியில் லீவ் போட்டு விட்டு வந்தோம். நானும் என் கணவரும் என் அம்மா வீட்டில் இருந்தோம். மாமானர் மாமியார் ஆகியோர் மாமியாரின் தம்பி கலீல் பாஷா வீட்டில் 16.06.2015 அன்று காலை 8.30 மணிக்கு, என் கணவரின் மாமா கலீல் பாஷா அவருடைய வீட்டிடம் யாரோ பிரச்சனை செய்வதாக கூறி எனது கணவரைஅழைத்து சென்றார். என் அப்பாவும் கலீல் பாஷா வீட்டிடம் சென்றதாக தெரிந்துக் கொண்டேன். என் அப்பா இரவு 1 மணிக்கு என் வீட்டிற்கு வந்தார். நானும் என் அம்மாவும் என் அப்பாவை என்ன ஆயிற்று என்று கேட்டோம். குச்சி பாளையத்தை சாந்த யாரோ தகறாரு செய்வதாக கூறினார். என் வீட்டுக்காரருடன் வேலை செய்த ஒரு பெண் காணாமல் போனது சம்மந்தமாக அங்கு வந்து தகறாரு செய்வதாக கூறினார். என் அப்பா என் கணவரை ஆம்பூர் டவுன் போலிஸ் ஸ்டேசனுக்கு கூட்டி சென்றார். உடன் என் மாமானாரும் சென்றார். பள்ளிகொண்டா காவல் நிலையத்திலிருந்து ஆம்பூர் காவல் நிலையத்திற்கு போன் வந்ததாகவும், எனவே ஆம்பூர் காவல் நிலையத்தார் என் கணவரிடம் பிரச்சனையை பள்ளிகொண்டா காவல் நிலையத்தில் சென்று தீர்த்துக் கொள்ள சொன்னதாக சொன்னார். அப்போது என் அப்பா, மாமனார், என் கணவரின் மாமா ஆகியோர் பள்ளிகொண்டா காவல் நிலையத்திற்கு சென்றதாகவும் அங்கு எஸ்.ஐ. ரவி என்பவர் இருந்ததாகவும் அப்போது ஆய்வாளர் இன்னும் வரவில்லை என்றும் ஆய்வாளர் வந்தால் தான் விசாரிப்பார்கள் என்று கூறி என் கணவரையும் மற்றவர்களையும் நிறுத்தி வைத்ததாக என் அப்பா கூறினார். அதன் பிறகு இரவு 12.30 வரை பள்ளி கொண்டா காவல் நிலையத்தில் இருந்தார்கள். அதன் பிறகு ஆய்வாளர் வர வில்லை என்று என் கணவரின் அப்பா, கணவரின் மாமா மற்றும் என் அப்பா ஆகியோர் திரும்ப வந்து விட்டார்கள். என் கணவர் வரவில்லை. பள்ளிகொண்டா காவல் நிலையத்திலேயே இருந்தார். மறுநாள் சென்று பார்த்தோம். மறுநாள் என் அப்பா, மாமனார் மற்றும் என் கணவரின் மாமா மீண்டும் பள்ளிகொண்டா காவல் நிலையம் சென்று பார்த்ததாகவும் ஆனால் அவர்களை பள்ளிகொண்டா போலிசார் விசாரணை நடப்பதாக கூறி திருப்பி அனுப்பி விட்டார்கள். 18.06.2015 அன்று நான் என் அப்பா மற்றும் என் கணவரின் மாமா, என் மாமனார் ஆகியோர் பள்ளிகொண்டா காவல் நிலையத்திற்கு சென்றோம். அங்கு என் கணவர் இல்லை. விசாரணைக்கு கூட்டி சென்று இருப்பதாக அங்குள்ள போலிசார் கூறினார்கள்.

எனவே நாங்கள் ஒரு மணி நேரம் அங்கு இருந்து விட்டு வந்து விட்டோம். 19.06.2015 அன்று என் அப்பாவுக்கு போன் வந்தது. பள்ளிகொண்டா காவல் நிலையத்திலிருந்து என் கணவரை எழுதிக்கொடுத்துவிடடு கூட்டிச்செல்லுமாறு சொன்னார்கள். எனவே என் அப்பா பிற்பகல் 3 மணிக்கு பள்ளிகொண்டா காவல் நிலையம் சென்றார். என் அப்பா என் கணவரை பள்ளிகொண்டா காவல் நிலையத்திலிருந்து ஆம்பூர் அரசு மருத்துவமனைக்கு கூட்டி சென்றதாக எனக்கு போன் செய்தார். பிறகு நான் ஆம்பூர் அரசு மருத்துவமனைக்கு சென்று என் கணவரை பார்த்தேன். அப்போது என் கணவருக்கு கை கால் அனைத்தும் வீங்கி இருந்தது. கையை தூக்கவே முடியவே இல்லை. முதுகில் கோடு போட்ட மாதிரி கருப்பாக இரத்தம் கட்டி இருந்தது. இது சம்மந்தமாக என் கணவரை என்ன ஆனது என்று கேட்டேன். பள்ளிகொண்டா போலிசார் கைகளை கட்டி தொங்கவிட்டு வைத்து அடித்ததாக சொன்னார். அங்கு ஸ்கேன் வசதி இல்லாததால் மேல் சிகிச்சைக்காக அடுக்கம்பாறை அரசு மருத்துவமனைக்கு கூட்டி செல்ல சொன்னதன் பேரில் 22.06.2015 அன்று கூட்டி அடுக்கம்பாறை மருத்துவமனைக்கு கூட்டிச்சென்றோம். அப்போது என் கணவருடன் நான், என் மாமானார், மாமியார் ஆகியோர் அடுக்கம்பாறை மருத்துவமனைக்கு சென்றோம். பின்னர் இரண்டு நாட்கள் சிகிச்சையில் இருந்தபோது 25.06.2015 அன்று அடுக்கம்பாறையில் நரம்பு டாக்டர் இல்லாததால் சென்னை அரசு மருத்துவமனைக்கு கூட்டிச் செல்லும் படி சொன்னார்கள். அதன் பேரில் 25.06.2015 அன்று சென்னை அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். காலை 11 மணிக்கு மருத்துவர்கள் என் கணவரை பரிசோதனை செய்தார்கள். பின்னர் அவருக்கு அதிக சளி இருப்பதாக கூறி சிகிச்சை கொடுத்து டியூப் போட்டு சளியை எடுத்தார்கள். பின் ஐசியு வார்டில் என் கணவரை வைத்து சிகிச்சை அளித்தார்கள். என் கணவருக்கு மூச்சு விடுவது சிரமம் ஆக இருந்ததால் ஐசியு வில் மூச்சு விடுவதற்கான சிகிச்சை அளித்தர்கள். மதியம் 2 மணிக்கு என் கணவருக்கு மிகவும் சீரியஸாக இருப்பதாக சொன்னார்கள். பின் 5.45 மணிக்கு என் கணவர் இறந்து விட்டதாக சொன்னார்கள். பின்னர் என் அம்மா, அப்பாவும் ஆம்பூருக்கு வந்து விட்டோம். 27.06.2015 அன்று என் கணவரின் பிரேதத்தின் மீது பிரேத விசாரணை செய்து பின்னர் பிரேத பரிசோதனை செய்து பிரேதத்தை கொடுத்தார்கள். ஆம்பூரில், ஆய்வாளர்

அடித்ததால் தான் என் கணவர் இறந்ததாக கலவரம் ஆயிற்று. இரவு 2.45 மணிக்கு தான் உடல் நீலிக்கொல்லை மஜித் கபஸ்தானத்தில், நாங்கள் என் கணவரின் உடலை அடக்கம் செய்தோம். இந்த வழக்கு சம்மந்தமாக என்னையும் என் அப்பாவையும் வேலூரில் நீதிபதி விசாரித்து வாக்குமூலம் வாங்கினார்கள். அதில் ஆய்வாளர் மார்டின் அடித்து என் கணவர் இறந்து விட்டதாக நான் சொன்னேன். 29.09.2015 அன்று சிபிசிஐடி டி.எஸ்.பி. எங்கள் வீட்டில் வந்து என்னையும் என் அம்மாவையும் விசாரித்தார்கள். அப்போது எனக்கு சுத்தமாகவே தமிழ் பேச வராததால் நான் உருது மொழியில் வாக்குமூலம் கொடுத்தேன். அப்போது அதை முகமது ஜலால் என்பவர் மொழி பெயர்த்து டிஎஸ்பி யிடம் சொன்னார். பின்னர் என்னை படித்து பார்க்க சொன்னார்கள் நான் படித்து பார்த்து சரியாக இருப்பதாக சொன்னேன்.

குறுக்கு விசாரணை

நான் பத்தாம் வகுப்பு படித்துள்ளேன். நான் உருது மொழியில் தான் படித்தேன். எனக்கு தமிழ் ஒரு பாடம் இல்லை. எனக்கும் என் கணவருக்கும் திருமணம் ஆன பிறகு என் கணவரின் நடவடிக்கையில் எனக்கு சந்தேகம் ஏற்பட்டதா என்றால் இல்லை. ஒரு பெண்ணை காணவில்லை என்று என் கணவரின் மாமா வீட்டில் வந்து சில பேர் விசாரித்ததாக என் அப்பா சொன்னார். சுமார் 10 நபர்களுக்கு மேல் வந்து என் கணவரை தேடியதாக என் கணவரின் மாமா சொன்னார். அப்போது என் அப்பா ஆட்டோ ஓட்ட போய் விட்டார். எனவே அவருக்கு தெரியாது. ஆம்பூர் டவுன் காவல் நிலையத்திற்கு என் அப்பா என் மாமானார் மற்றும் என் கணவரின் மாமா கலீல் பாஷா என் கணவரை கூட்டி போனார்கள். அந்த செய்தியை என் அப்பா தான் என்னிடம் சொன்னார். புகார் கொடுத்தீர்களா என்று நான் கேட்டேன். அதற்கு முன்பாகவே போன் வந்து விட்டதாக சொன்னார். புகார் கொடுத்தார்களா என்பது எனக்கு தெரியாது. ஆம்பூர் காவல் நிலையத்திற்கு எத்தனை மணிக்கு கூட்டி சென்றார்கள் என்பது எனக்கு தெரியாது. பள்ளிகொண்டா காவல் நிலையத்திற்கு எத்தனை மணிக்கு கூட்டி சென்றார்கள் என்பதும் எனக்கு தெரியாது. அங்கு ரவி எஸ்.எஸ்.ஐ. இருந்ததாக என் அப்பா சொல்லி எனக்கு தெரியும். ரவி எஸ்.எஸ்.ஐ. விசாரித்தாரா என்றால் அது பற்றி என் அப்பா சொல்லவில்லை. பள்ளிகொண்டா காவல் நிலையத்தில் என் கணவரைப் பற்றி ஏன் விசாரிக்கிறார்கள் என்று

கேட்டதற்கு ஒரு பெண் காணாமல் போனது சம்மந்தமாக பள்ளிகொண்டா் காவல் நிலையத்தில் புகாா் இருப்பதாகவும் அது சம்மந்தமாக விசாரிப்பதாக சொன்னாா். காணமால் போன பெண்ணுக்கும் என் கணவருக்கும் என்ன சம்மந்தம் என்று என் அப்பாவை நான் கேட்கவில்லை. என் அப்பாவும் சொல்லவில்லை. என் கணவா்அந்த பெண்ணுடன் தவறான உறவு வைத்திருந்தாா் என்பது எனக்கு தெரியாது. காணாமல் போன பெண், என் கணவரை தேடிக்கொண்டு ஈரோடு சென்றாா் என்பது எனக்கு தெரியாது. அந்த பெண்ணுக்கு ஈரோட்டில் தனியாக வீடு எடுத்து வைத்திருந்தாா் என்பது எனக்கு தெரியுமா என்றால் அவ்வாறு என் கணவா் வைத்திருக்கவில்லை. அந்தப் பெண்ணை ஈரோடிலிருந்து டிரெய்ன் ஏற்றி விட்டு விட்டு அந்தப் பெண்ணின் பெற்றோா்களுக்கு போன் மூலமாக தகவல் கொடுத்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. அந்த பெண் காணாமல் போனது குறித்து சென்னை மாண்புமிகு உயா் நீதிமன்றத்தில் ஆட்கொணா்வு மனு தாக்கல் செய்யப்பட்டு அது நிலுவையில் இருப்பது பற்றி என் அப்பா என்னிடம் சொன்னாரா என்றால் சொன்னாா். அது பற்றி என் அப்பா என்னிடம் சொன்னாரா என்றால் சொன்னாா். அந்தப் பெண்ணுக்கும் என் கணவருக்கும் இருந்த உறவு பற்றி தெரிந்து என் அப்பா என் கணவா் மீது கோபமாக இருந்தது பற்றி எனக்கு தெரியுமா என்றால் அவ்வாறு இல்லை. காணாமால் போன பெண்ணுக்கும் என் கணவருக்கும் கள்ள தொடா்பு இருந்து அது என் அப்பாவிற்கு தெரிய வந்து என் அப்பா என் கணவா் மீது கடுமையான கோபத்தில் இருந்தாா் என்றால் அவ்வாறு இல்லை. 16.06.2015ஆம் தேதி காவல் நிலையத்தில் ஆய்வாளா் இல்லை என்று என் அப்பா என்னிடம் சொன்னாரா என்றால் அன்றைய தினம் தான் காவல்நிலையத்திற்கே சென்றாா்கள். அடுத்த நாள் 17.06.2015 அன்று காவல் நிலையத்தில் ஆய்வாளா் அங்கு இல்லை. 18.06.2015 அன்று ஆய்வாளா் காவல் நிலையத்தில் இருந்தாரா என்றால் இல்லை. 19.06.2015 அன்று நான் காவல் நிலையத்திற்கு செல்லவில்லை. 19.06.2015 அன்று எத்தனை மணிக்கு ஆய்வாளா் வந்தாா் என்று என் அப்பா சொன்னாாரா என்றால் இல்லை. 19.06.2015 அன்று பள்ளிகொண்டா காவல் நிலையத்தில் என்ன நடந்தது என்று சொன்னாரா என்றால் இல்லை. என் அப்பா என் கணவரை பள்ளிகொண்டா் காவல் நிலையத்திலிருந்து பிற்பகல் 3 மணிக்கு கூட்டி வந்தாா். என் அப்பாவும்

அவருடன் இருந்தவர்களும் என் கணவர் ஜமில் பாஷாவை நல்ல முறையில் கூட்டி செல்வதாக பிற்பகல்1மணிக்கு எழுதிக் கொடுத்து விட்டு கூட்டிச் சென்றுள்ளார்கள் என்றாலும் அது தெரிந்திருந்தும் பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பிற்பகல் 1 மணிக்கு பள்ளிகொண்டா காவல் நிலையத்திலிருந்து கூட்டி வந்து என் அப்பா என் கணவரை எங்கு வைத்திருந்தார் என்பது எனக்கு தெரியுமா என்றால் என் அப்பா என் கணவரை பிற்பகல் 3 மணிக்குதான் பள்ளிகொண்டா காவல் நிலையததிலிருந்து கூட்டி வந்தார். 1 மணியிலிருந்து 4.30 மணி வரை ஒரு இடத்தில் வைத்து என் கணவரை என் அப்பா அடித்து பின்னர் 4.30 மணிக்கு ஆம்பூர் அரசு மருத்துவமனைக்கு என் அப்பா கூட்டி வந்தார் என்றால் இல்லை. ஆம்பூர் அரசு மருத்துவமனையில யார் சேர்த்தது என்றால் என் அப்பாதான். மருத்துவமனையில் சேர்த்த நேரம் தெரியாது. என் கணவருக்கு 19.06.2015 அன்று மதியம் உணவு யார் வாங்கி கொடுத்தார்கள் என்று என் அப்பாவை நான் கேட்கவில்லை. என் கணவரைவுயம் நான் கேட்கவில்லை. 4.30 மணிக்கு மருத்துவமனையில் சேர்த்து விட்டு என் கணவருக்கு என் மாமனார் என்ன வாங்கி கொடுத்தார் என்பது எனக்கு தெரியாது. அன்று இரவு என் கணவர் நூடுல்ஸ் சாப்பிட்டார். அதன் பிறகு மருத்துவமனையில்தான் இருந்தார். அதன் பிறகு என் கணவரை எங்கு பார்த்தேன் என்றால் நான் என் கணவருடன் தான் இருந்தேன். என் கணவர் 19.06.2015 இரவு முதல் 20.06.2015 மாலை 4 மணி வரை மருத்துவமனையிலேயே இல்லை என்றாலும் என் அப்பா எங்கோ கூட்டி சென்று அடித்தார் என்றாலும் அவ்வாறு இல்லை. என் கணவருடன் நான் இருந்ததாக சொல்வது முற்றிலும் பொய் என்றாலும் இந்த நீதிமன்றத்தில் பொய் சாட்சி அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. காலையில் மருத்துவர் எத்தனை மணிக்கு வந்தார் என்றால் எனக்கு நேரம் தெரியாது. நான் மருத்துவமனையிலேயே இல்லாததாலும் நான் மருத்துவமனையில் இருந்ததாக பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. காலையில் மருத்துவ மனையில் என்ன உணவு கொடுத்தார்கள் என்றால் நான் வெளியில் இருந்து இட்லி வாங்கி வந்து சாப்பிட்டடோம். மருத்துவமனையில் நான் உணவு வாங்கவே இல்லை. நானும் என் கணவரும் மருத்துவமனையில் இல்லை என்பதாலும் காலை உணவை நாங்கள் வாங்கவில்லை என்றாலும்

ஆனால் நாங்கள் மருத்துவமனையில் இருந்ததாக பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மருத்துவமனையில் மதிய உணவு என்ன கொடுத்தார்கள் என்றால் என் மாமியார் வீட்டில் செய்துக்கொண்டு வந்து கொடுத்தார். என் மாமியார் வீட்டில் இருந்து உணவு கொண்டு வரவில்லை என்றாலும் நானும் என் கணவரும் மருத்துவமனையிலேயே இல்லை என்றாலும்ெ பொய் சாட்சி அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. என் கணவர் எவ்வாறு உணவு சாப்பிட்டார் என்றால் நான் வாங்கி கொண்டு வந்த உணவை நான் ஊட்டி விட்டேன். 19.06.2015 இரவு முதல் 20.06.2015 மாலை வரை என் கணவர் மருத்துவ மனையில் இல்லை என்றாலும், நான் ஊட்டி விட்டதாக சொல்வது பொய் என்றாலும் சரியல்ல. என்ன மருந்துகள் மாத்திரைகள் கொடுத்தார்கள் என்று எனக்கு தெரியாது. அந்த மருந்து மாத்திரைகளை என் மாமனார் என் மாமியார் தான் வாங்கினார்கள். 19.06.2015 அன்று என் கணவரை மருத்துவ மனையில் சேர்த்தபோது என் மாமனார் மாமியார் இருவருமே இல்லை என்றாலும் நான் இந்த நீதிமன்றத்தில் பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 19.06.2015 முதல் 20.06.2015 வரை என் கணவரை காணவில்லை என்று போலிசார் தேடியது எனக்கு தெரியுமா என்றால் அவ்வாறு இல்லை, 19.06.2015 அன்று கூட போலிசார் என் கணவரை வந்து பார்த்து விட்டு போனார்கள். அவ்வாறு பார்த்த நேரம் என்ன என்றால் எனக்கு நேரம் தெரியாது. என் கணவர் மருத்துவமனையில் இல்லாததால் என் கணவரை தேடிக்கொண்டு இருப்பதாக ஆம்பூர் டவுன் காவல் நிலைய ஆய்வாளர் என் அப்பாவிடம் சொன்னது எனக்கு தெரியாது. 20.06.2015 அன்று மாலை 4 மணிக்கு பிறகு என் கணவரை தேடிவந்த ஆய்வாளரிடம் என் கணவரை காண்பிப்பதாக என் அப்பாதான் கூட்டி வந்து காண்பித்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியுமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறு ஒரு நாளுக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.